உ
சிவமயம்



மாதகல் கிழக்கைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர். திருமதி. குகராசா தயாசலா



அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03.05.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர்

# திருமதி. குகராசா தயாசலா

அவர்களின் சிவபதப்பேற்றில் மலர்ந்த

# - நினைவு மலர் -

**03.05.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

எங்கள் குடும்ப விளக்காக இருந்த

எமது அன்பிற்கினிய தெய்வமே

உங்கள் இன்பமெல்லாம் துறந்து

பாசமாய் எம்மை வளர்த்தீரே

இறையடி நிழலில்

இளைப்பாறச் சென்றீரோ

உங்கள் ஆத்மா இறைவன் திருவடியில்

சாந்தியடைய வேண்டுமென்று வேண்டி

இம்மலரை உங்கள் திருவடிகளில்

கண்ணீருடன் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்து உகந்தான் மனத்துள் இருக்க
ஏன்றான். இமையவர்க்கு அன்பன் திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்அடியோங்களுக்கே.

## திருவாசகம்

காலம் உண்டாகவே காதல் செய்து உய்மின் கருதரிய
ஞாலம் உண்டானொடு நான்முகன் வானவர் நண் அரிய
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்பிரான் தன் அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே

## திருவிசைப்பா

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதம் மாறா வெள்ஆனை மேல் கொள்ள
முளையாமதி சூடி மூஆயிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம் நின் ஆடு அரங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற
உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

உம்பர்தரு தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற்றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
எந்தனுயிர்க் காதரவு றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தை வலத்தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வாழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# திருமதி. குகராசா தயாசலா
# அவர்களின்
# வளம் மிகுந்த வாழ்வியல் சுவடுகள்

சிவ பூமியாகவும் சுந்தர பூமியாகவும் திகழும் ஈழவள நாட்டின் வடபால் பொருந்திப் பெருமையுடன் அமைவது யாழ்ப்பாணக் குடாநாடாகும். இக் குடாநாட்டின் வலி தென் மேற்குப் பிரிவில் மாதகல் கிராமத்தில் மண் வளமும், நீர் வளமும் சிறந்து நாற்திசையும் பாணாகவெட்டி அம்மன் ஆலயமும், நுணசை முருகமூர்த்தி ஆலயமும், சித்தி விநாயகர் ஆலயமும், காஞ்சிபுர வைரவர் ஆலயமும், நடுப்பகுதியில் மாதகல் மாணிக்கம்பதியில் மாசிலாமணி அன்னலட்சுமி என்னும் தம்பதிகளின் மூத்த புதல்வியாக வந்து தோன்றினார். இவர் பிறந்த காலம் 06.09.1966ம் திகதியாகும்.

அன்புச் சகோதரர்களாக அருமைச் சகோதரிகளாக ஜெயாசலா, விஜியநிர்மலா, (அமரர்), ஜீவராணி, ஆசை அன்புச் சகோதரன் அசோக்குமார், இளைய தங்கையாக அருமைத் தங்கை ராஜகுமாரி ஆகியோருடன் மகிழ்வாக வாழ்ந்து வந்தார். தனது ஆரம்பக் கல்வியினை யா / மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும், அறிவுக் கல்வியினை யா / மாதகல் சென். யோசப் மகா வித்தியாலயத்திலும் கல்வியினைப் பெற்று இவரின் வெளித்திறமையாக விளையாட்டு திறமைகளிலும், பல போட்டிப் பரீட்சைகளிலும் பங்குபற்றி தன்னுடைய திறமைகளை வெளிக்காட்டி வந்தவராவார். தனது பள்ளி தோழிகளோடு அன்புடனும், மகிழ்வுடனும் இன்பமாகவும் பள்ளி வாழ் வாழ்க்கையின் துல்லியமாக நல்லொழுக்கத்துடன் செயற்பட்டு வந்தவராவார். இவரின் தனது பள்ளி வாழ்வை முடித்து தொடர்ந்து தனக்கென ஒரு தொழில் வேண்டும் என்று தன்னிச்சையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்ப்பட வேண்டும் என்று ஆர்வம் காட்டி தனது தொழிலுக்காக தையல் பயிற்சியில் ஆர்வம் காட்டி, தையல் கலையிலே திறமையாக செயற்பட்டு தனக்கென் வருமானத்தினை பெற்று பின்னர் நெசவுத் துறையில் ஆர்வம் காட்டி சேலை நெய்தல் கலையில் தனது திறமைகளை செயலில் காட்டி வந்த வேளையில் தாயாரின் உடல் நிலை காரணமாக தன் தொழிலினை நிறுத்தி தனது அம்மாவின் உடல் நிலைகளையும் தமது சகோதர்களின் எதிர்காலம் கருதி தந்தையுடன் சேர்ந்து குடும்ப பொறுப்பினை ஏற்ற வேளையில் இரவது சகோதரன் அசோக்குமார் வெளியூர் சென்று கொண்டு குடியிருக்கும் வேளையில் இவருடைய தாயார் அமரர் இறைவன் பதம் அடைந்தார். இவ்வேளையில் தாய்க்கு தாயாக இருந்து சகோதரர்களை தன் பிள்ளைகள் போல் அறிவுரைகளைக் கூறியும் அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு பக்கபலமாக இருந்தவராவார்.

தனது முதலாவது சகோதரியான ஜெயாசலா வெளியூர் (சுவிஸ்) நாட்டிற்கு அனுப்பி வேலுப்பிள்ளை நாகம்மாவின் கனிஸ்ர புத்திரனான சிவகுமார் என்பவருக்கு கைப்பிடித்து கொடுத்தார். தானும் தனக்கென ஒரு வாழ்வை அராலி தெற்கை சேர்ந்த வைரவநாதர் வியாழாச்சி ஆகிய தம்பதிகளின் இளைய புதல்வாரன குகராசா என்பவரை 22.03.1995ம் ஆண்டு திருமணம் கொண்டு இனிதான இல்லற வாழ்க்கையை தொடர ஆரம்பித்தார்.

ஒரு வருடத்தில் தன் சகோதரியின் குடும்ப முதல் குத்து விளக்கென அனோஜாவின் (பெறாமகளின்) பிறப்பினைக் கண்டு பெருமிதமடைந்துவரும் வேளையில் தந்தை நோய் பிணியில் சிக்கியபோது கைகொடுத்து பார்த்த வேளையிலும் மீட்க முடியாத மீளாத்துயில் கொண்டபோதும் தனது துக்கத்தினை தன்னுடன் மறைத்து தனது இரண்டாவது சகோதரியையும் வெளியூர் (சுவிஸ்) நாட்டுக்கு அனுப்பி சின்னத்துரை ராசலட்சுமியின் புதல்வனான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரேஸ் என்பவரை கரம்பிடித்து வாழ வழிகாட்டி இரண்டு வருடத்தில் இரண்டு பெறாமகன்களை (அபிஸ், தனுஸ்) கண்டு புன்னகைத்தார்.

இளைய சகோதரியான ராஜகுமாரியை செல்லக்கண்டு சிவபாக்கியம் தம்பதியினரின் மகனான கிருஷ்ணகுமார் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தார். இவர்களின் புதல்வர்களாக கபிஷன், மேனுஷன் இரண்டு பெறாமகன்களை தனது பிள்ளைகள் போல் வளர்த்து அறிவுரைகளையும் கூறி வந்தவராவார். அத்தோடு அன்புச் சகோதரன் அஷோக் என்பவருக்கு திருமண பந்தத்தினை முத்துலிங்கம் பேவி தம்பதிகளின் செல்வ புதல்வியான சிற்சபேஷினி (ரேவதி) என்பவரை கரம்பிடித்துக் கொடுத்து அவர்களின் மகனை அயூர ன் என்பவரை தனது அருமை மருமகனைக் கண்டு பூரிப்படைந்து தனது அயலவர், உற்றார், உறவினர்களோடும். நண்பர்கள். அனைவரோடும் தனது வாழ்க்கையை சந்தோஷமாகவும், அன்பாகவும் இருந்து எந்த ஒரு இன்ப துன்பங்களில் தான் என்று நின்று கருமத்தினை நிறைவேற்றி தன் வாழ்வினை மேம்பட வாழ்ந்தவர்.

இவ்வேளையில் தனது உடல் சீற்றம் காரணமாக தனது நோயினை காட்டிக் கொள்ளாமல் வெகு சீக்கிரமாக (03.04.2015) அன்று மாதகல் ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தீர்த்தம் ஆடும்போது தன்னையும் அம்மன் திருவடி சேர்த்துக் கொண்டார்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவர் புலம்பல்

திருமணமான நாள் தொடக்கம் ஓர் குறையுமின்றி
வாழ்ந்து வந்தோம்
நாதியற்ற எனக்கு திருமணமாகிய பின்
நீரே தாயாகி துணையாய் இருந்தீர்
அன்புடனும், பாசத்துடனும், பரிவுடனும்
என்னுடன் நடந்துகொண்டீரே
நாம் ஒருவருக்கொருவராக வாழ்ந்து வந்தோமே
கனவுகள் எல்லாம் கலைந்து போனதே
என்னை தனியாக தவிக்கவிட்டு விட்டு போய் விட்டீரே
ஏன் இவ்வளவு அவசரம்! என் மனம் இப்பிரிவை
ஏற்க மறுக்கிறது
தெய்வமாகிவிட்ட என் அன்புத் துணைவியே
உங்களது ஆத்மா சாந்தி அடைய என்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

## சகோதரி புலம்பல்

என் மூத்தவளே எங்கு சென்றாய் நீ
உன் திருமுகம் காண ஏங்கி நிற்கின்றேன்
நீ வருவாய் என
எத்தனை புத்திகளையும் எத்தனை அறிவுரைகளையும்
கூறி இருப்பாய் நீ எனக்கு
தாயும் இல்லாத வேளையில் தாயும் ஆனாய் நீ
தந்தை இல்லாத வேளையில் தந்தை ஆனவள் நீ
என் செல்ல மகளைக் கண்டு உன் குறையை தீர்த்தவளே
நீதான் அனோஜா எங்கள் வீட்டு
குத்து விளக்கு எனக் கூறி
அவளை புன்னகைக்க வைப்பாயே தேடுகிறாள் - இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியம்மா எங்கே என்று
எல்லாமே காற்றாகி விட்டதோ
ஏங்குகின்றேன் வாடுகின்றேன்
ஏக்கத்தை போக்க வருவாயா
ஏக்கத் துடிப்புடன் உன் ஆத்மா
சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றேன்.
**ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !!!**

**உன் அன்புச் சகோதரி**
**ஜெயா (சுவிஸ்)**

# சகோதரி புலம்பல்

இனிய உடன் பிறப்பே என் அம்மன் சிலையே – நீ
என்னை விட்டு எங்கு சென்றாய்
அன்பு பாலமாய் இருந்தாயே
அன்புச் சகோதரியே – நீ
அளவில்லை அன்பை சொல்லி
ஆழுமையான மனசாலே உயர்த்தி வைத்தாயே – உன்
அன்பான வார்த்தைகளைச் சொல்லி
என் பிள்ளைகளின் நெஞ்சங்களையே
நிறைத்த என் அன்பு சகோதரியே
நேற்றுவரை உன் குரல் கேட்டு
நான் இங்கு இருந்தேன்
இனிய குரலை கேட்பதுதான் எப்போ?
இளவயதிலே உன்னை இழந்து நான் இங்கு
வாடுகின்றேன் உன் திருமுகத்தைக் காண்பது எப்போ?
நீ இல்லை என்றதுமே எல்லாமே இருளாகிப் போனதுவே
உன் இழப்பு பொய்யாக இருக்கக் கூடாதா?
என்று நான் இங்கு இருந்து புலம்புகின்றேன்
என்றாலும் உன் ஆத்ம சாந்திக்கு நாள் பிரார்த்திக்கின்றேன்.

**உன் அருமைச் சகோதரி**
**விஜிதா (சுவிஸ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமைச் சகோதரன் புலம்பல்

அம்மாவுக்கு பின்வந்த தாய் அக்கா நீ
உன் மடியில் ஒரு கணம் படுத்து
ஒரு வாய் சாப்பிட ஆசைப்பட்டேன் - அக்கா
ஆனால் என் ஆசை கனவாகிப் போனதே – அக்கா

அம்மாவைப் பார்க்கவில்லை அப்பாவையும் பார்க்கவில்லை
உன்னையும் என்னால் உயிருடன் பார்க்க முடியில்லையே – அக்கா
25 வருடம் உன் முகத்தை நான் காணவில்லை
ஆனால் இறைவனின் விருப்பம் அதுவோ – அக்கா

உன் முகத்தை நான் இக் கோலத்திலேயே
காண்பது நியதி ஆகிவிட்டதே – அக்கா
சென்ற கிழமை உன் கழுத்தில் மணமாலை
அடுத்த கிழமை உன் காலில் மலர்மாலை ஆகிவிட்டதோ – அக்கா

உன் சிரிப்பு உன் நளினம் என் கண் முன் நிற்பது போல் தெரிகிறதோ -
அக்கா
அக்கா உன்னை எங்களுக்குப் பிடிப்பது போல
கால தேவனுக்கு பிடித்து விட்டதே
அதனால்த்தான் அவன் உன்னை
சொர்க்கத்திற்கு எடுத்துக் கொண்டானோ – அக்கா

**உன் ஆசைத் தம்பி**
**அசோக்குமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைய சகோதரி புலம்பல்

ஒரு தாயில் நாம் பிறந்து ஒன்றாக நாம் வளர்ந்து
ஒரு பாயில் நாம் உறங்கி பாசமுடன் நாம் வளர்ந்து
பாரினிலே புகழ்தேடி நாம் வாழ்ந்த வாழ்க்கையும்
எண்ண எண்ண நெஞ்சம் எரிமலையால் ஏகாதிக்குதம்மா
பெற்ற தாயினும் மேலாக பரிவு காட்டினாயே
தங்கச்சி என பாசமுடன் அழைப்பாயே
மட்டற்ற பாசம் கொண்ட அக்காவே
வாட்டமுற்று துயரில் வருந்துகிறேன்
இத்தனையும் விதியே என்றெண்ணி
உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றேன்

**உன் அருமைச் சகோதரி**
**சுதா**

## மாமன்மார், மாமிமார் புலம்பல்

குடும்பத்திற்கு ஒளிவிளக்காய் பாசத்தின் மருமகளாய்
எந்நிகழ்விற்கும் எம்மோடு கலந்து நிற்பீரே
எம்மை எல்லாம் பார்ப்பீர் என நம்பியிருந்தோம்
நோயினால் வைத்தியசாலை போகும் போது
குணமாகி வருவீர் என எதிர்பாத்துக் கொண்டிருந்தோம்
இடையினில் காலனவன் காவு கொண்டதேனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தப்பாமார், சித்திமார், பெரியம்மா புலம்பல்

தக்கதொரு தருணத்தில் துணையும் செய்து
தார்ப்பரியக் கதைபேசி எம்மோடு சேர்ந்து நின்றீரே
பக்குவமாய் எம்மோடு பழகிக் கொண்ட
குணக்கொழுந்தே உமையினி காண்பதெப்போ

சொப்பனமே கண்டதுபோல் வாழ்க்கை போச்சு
சோதரியே உலகிலிது இயற்கை அன்றோ
எப்பிறவி எடுத்தாலும் உம்மை நாமும்
என்றென்றும் நினைத்திடுவோம் அடைக சாந்தி

# மச்சான்மார், மச்சாள்மார், மைத்துனர்மார் புலம்பல்

அன்பிற்கோர் உறைவிடமே
அகிலத்தில் உமைத்தேடி அலைகின்றோமே
இன்புற்று நாமிருக்கும் வேளை தன்னில்
இப்படியோர் செய்திதனைக் கேட்டோமன்றோ
வன்புற்று எமை விடுத்து ஏன் தான் சென்றீர்
என்பெல்லாம் உருகுதந்தோ என்ன செய்வோம்
எங்களது உறவே குலக் கொழுந்தே எழுந்து வாரீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமக்கள், மருமக்கள் புலம்பல்

சினந்தறிந்தோ மில்லையன்பு சொரியக் கண்டோம்
தேடிவரின் அணைத்தாசை யோடு கொஞ்சி
மனந்திறந்து பழகியநம் உறவு நீங்கள்
மாண்ட துயர்ச் சேதியினால் மலைப்புற்றோமே
வனந்தனிலே வலைப்பட்ட மான் போல
வதைகின்றோம் கதறுகின்றோம் சோக வெள்ளம்
தினம்பரவிப் பாயவழி யானதாமோ
தேடரிய திருமுகத்தைக் காண்ப தெப்போ
கொடுத்தறிவீர் அல்லாது எடுத்த தில்லை
கொஞ்சமும் நீங்கள் வஞ்சகத்தை அறிந்ததில்லை
தேசமெங்கு தேடினும் காணமாட்டாத்
திருமுகத்தை இனிக் காணமுடியுமோ
நாசமிது நெஞ்சதனை எரிக்குதையோ
தாங்கள் இனிமேல் என் சொல்லி ஆறுவோமோ

# என் அன்புத் தோழியே......

எம்மோடு இருந்தாய் இன்னொரு தாயாய்
சந்தோசம் பகிரவே நம்வீடு வருவாய்
எங்குதான் சென்றாலும் உன்
உதவும் கைகள் ஓய்வதில்லையம்மா
ஏதாவது செய்து எளிதில் எவர்
மனதிலும் இடம் பிடித்து விடுவாய்

நம் வீடு காணாமல் தான் நீ வேறு
எவ்வீடும் சென்றதுண்டோ?
நீயும் நம் வீட்டவரில் ஒரு
பாகம் தானே என்றும்
உன் உதட்டில் சிரிப்பைக் காண
நாம் கூறாத கதைகளா உன் காதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றோடு உன் குரல் இன்றும் ஒலிக்கிறது
நேற்றோடு நீ பேசிய வார்த்தைகள் தானே
அயலவளாகவா மட்டும் நீ???
என்னுயிர் தோழி என்றல்லவா சொன்னேன்
நான் என்றும் புலம்புகையில் நீ ஆறுதலாய்
என் வீடு வந்தாய்...
இன்று மட்டும் ஏன் இந்த நிரந்தர தூக்கம்

தொலைந்ததோ இன்னொரு துணை
இனி கவலையில் கரைகையில்
அதை பகிரவோ நீ இங்கு இல்லை
நினைவுகளை சுமக்க விட்டு
நிரந்தர பிரிவினை எடுத்துச் சென்றாயே
என்றென்றும் உன் ஆத்மா சாந்தி வேண்டி
பிரார்த்திக்கின்றோம்.

**என்றும் அன்பின் தோழி சிவனேஸ்வரி குடும்பம்.**

## அயலவர், உற்றார், உறவினர் புலம்பல்

அன்பே உருவான அருமைத் திருமகளே
உன் வீட்டுப் பேரொளியை உயர்த்தி வைத்த குலவிளக்கே
என்றும் கள்ளம், கபடம், கயமைகளற்ற குலவிளக்கே
உள்ளம் படைத்த உத்தமியே
இன்பமாயின்று இறைவனடி சேர்ந்த திருமகளே
அடைக சாந்தி

கூட்டை விட்டுப் பறந்தது குயில்
கூவும் சத்தம் ஓய்ந்தது
வீட்டின் ஒளிவிளக்கு அணைந்தது
வெருட்டும் இருள் வந்து சூழ்ந்தது
நல்லவர் மதிக்க நாளும் நற்பொருள் ஈந்து நீரும்
பலபல அறங்களாற்றி பயன்பெற வாழ்ந்த
தன்னகைப் பூவிதழ் மங்கையே
அடைக சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை



தோற்றம்
06 . 09 . 1966

மறைவு
03 . 04 . 2015

மாதகல் கிழக்கைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்டவரும்.
மாதகல் விநாயகர் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்க
அங்கத்தவருமான

**அமரர்**

**திருமதி. குகராசா தயாசலா**

நேற்றுச் சிரித்தபடி நிஜமாய் இருந்தவரே
கண்மூடி விழிப்பதற்குள் கதை முடிந்து போனதெங்கே
ஈவிரக்கம் இல்லா காலன் எங்குதான் கொண்டு சென்றான்
ஊதிய பலூனில் ஊசி துளைத்தது போல
உங்கள் மறைவுச் செய்தி கேட்டு உதிரமே உறைந்ததம்மா
நின்றவர் அழுகின்றார் நினைத்ததுமே அழுகின்றார்
உள்ளத்தால் நாமெல்லாம் உன்னி உன்னி அழுகின்றோம்
நித்தமும் உன் உருவம் நினைவில் துடிக்குதம்மா
பிறக்கும்போது நீ மட்டுமே அழுதாய் - இன்று
இறக்கும்போது ஊரே அலறுதம்மா

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன்
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

பிரிவுத் துயர் பகிரும்
**மாதகல் விநாயகர் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்க
அங்கத்தவர்கள்.**

வானவில் பிறின்டேர்ஸ், மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
06
09
1966

உதிர்வு
03
04
2015

மாதகல் கிழக்கைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். திருமதி. குகராசா தயாசலா

அன்புடனும் பண்புடனும் பூவுலகில்
வாழ்ந்து நேசத்துடனும், பாசத்துடனும்
எம்முடன் பழகி இன்சொல் பேசி எல்லோருக்கும்
இன்முகம் காட்டி சுற்றத்தவருடன் அன்பும்
ஆதரவும் கொண்டு என்றும்
நல்லவராய் எல்லோருக்கும்
உதவி செய்யும் உத்தம
குணத்துடன் வாழ்ந்து எமக்கு
ஒரு வழிகாட்டி நீங்கள்
உம் பிரிவால் வருந்துயரம்
பெருந்துயராய் ஆனதே
கலங்குகின்றோம் உம் பிரிவால் நாம்

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

05.04.2015

பிரிவுத் துயர் பகிரும்
கதிரவேலு குடும்பத்தினர் - சாங்கானை.

வாலவில் பிறின்டேர்ஸ், மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
06
09
1966



உதிர்வு
03
04
2015

மாதகல் கிழக்கைப் பிறப்பிடமாகவும்,
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். திருமதி. குகராசா தயாசலா

இன்முகம் காட்டி இனிக்கப் பேசி வரவேற்கும் அக்காவே
நீங்கள் சென்ற இடம் தெரியாது தேம்பி அழுகின்றோம்
வென்றானே காலன் உங்கள் உயிரை மனம் திறந்து
பழகி எங்கள் மனங்களில் இடம்பிடித்தாயே
தினம் நீங்கள் நடந்த வீதியின்று திணறிப்போய்க் கிடக்கின்றதே
தேடிவந்த உறவுக்ளிங்கு செய்வதறியாது தவிக்கின்றதே
நாடிவந்த உற்றார்களெல்லாம் நாவிழுந்து போனரே!
தேடுகின்றோம் உங்கள் அன்பை எண்ணி.....

**அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

பிரிவால்த் துயருறும்
**சோமு குடும்பத்தினர்.**

05.04.2015

வாஸவில் பிறிண்டேர்ஸ், மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1966 | 2015 |
| 04 | 04 |
| 15 | 03 |



## அமரர்
## குகராசா தயாசலா

கோபுரம் சாய்ந்ததே
கொடுந்துன்பம் நேரிட்டதே
எங்கள் கோலங்கள் அழிந்ததுவே
ஏது கதி
தாங்க முடியாத துன்பத்தில்
தவிக்குதைய்யா எம் நெஞ்சம்
அமைதியாக துயிலும் தங்கள்
ஆன்மா இறைபதம் சேர
இறைவனை இறைஞ்சுகின்றோம்

உங்கள் ஆத்மா இறையடியில் சாந்தி பெற
இறைவனை வேண்டுகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
மாதகல் கிழக்கு மகளிர் கிராம
அபிவிருத்திச் சங்கம் J/150

Kajarams Tele Com T.P 021 225 0727, 0770871379



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் இரத்தினம்

1- மாணிக்கம் (ரூபி)
2- முத்து
3- புஷ்பராகம்
4- கோமேதகம்
5- வைரம்
6- மரகதம்
7- வைடூரியம்
8- நீலம்
9- பவளம்

# எண் கணிதம்

| | | |
|---|---|---|
| A – 1 | J – 1 | R - 2 |
| B – 2 | K – 2 | S - 3 |
| C – 3 | L – 3 | T - 4 |
| D – 4 | M – 4 | U - 6 |
| E – 5 | N – 5 | V - 6 |
| F – 8 | O – 7 | W - 6 |
| G – 3 | P – 8 | X - 5 |
| H – 5 | Q – 7 | Y - 1 |
| I – 1 | | Z - 7 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது விடயங்கள்

1) 9 மாகாணங்களுக்குமான பூக்கள்

| | | |
|---|---|---|
| i. | வடமேல் மாகாணம் | - எட்டேரியா |
| ii. | வடமத்திய மாகாணம் | - கொன்றை |
| iii. | மேல் மாகாணம் | - வெண்தாமரை |
| iv. | தென் மாகாணம் | - ஹீன்போவிடியா |
| v. | ஊவா மாகாணம் | - ஓர்க்கிற் (நரீவான்) |
| vi. | சப்பிரகமுவா மாகாணம் | - வெசாக் பூ (வைகாசி பூ) |
| vii. | மத்திய மாகாணம் | - பில்லிமலர் (பெரியசிவப்பு பூ) |
| viii. | வடக்கு மாகாணம் | - காட்டு மல்லிகை |
| ix. | கிழக்கு மாகாணம் | - விஷமூங்கில் |

2) டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்பின் பெயர்
**ஏடிஸ் ஹிப்பிக் எனும் பெண் நுளம்பு**

3) இலங்கையில் வீதிகளின் மன்னன் - **எட்வேட் பாண்ஸ்**

4) இலங்கையில் 18 வயதிற்கு மேற்பட்டோர் வாக்களித்த 1வது பொதுத்தேர்தல் - **1965ம் ஆண்டில்**

5) இலங்கையில் சபாநாயகர் பதவியை உருவாக்கிய யாப்பு **டொனமூர் யாப்பு** 1வது சபாநாயகர் - **மொலமுறே**

6) உலகில் 4200km நீளமும் ஆகக்குறைந்த அகலமான 177km ஐக் கொண்ட நாடு – **சிலி**

7) நாட்டின் படத்தை தேசிய கொடியில் கொண்டுள்ள நாடு **சைபிரஸ்**

8) நாட்டின் பெயரை நாணயத்தின் பெயராகக் கொண்ட நாடு **சயரோ (பழைய கொங்கோ)**

9) டெங்கு நுளம்புக்குமு அழிக்க உதவும் பக்றீரியா
**BTI பக்றீரியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10) தொடர்ந்து 3 தடவை பிரதமராக இருந்த பெண்மணி
மாகிரட் தட்சர் - இங்கிலாந்து நாடு
காலம் - 1979 – 1990

11) கூடிய காலம் பிரதமராக இருந்த பெண்மணி
இந்திராகாந்தி – 14 வருடம்

12) சார்க் அமைப்பு நாடுகளிடையே கல்வி அறிவு கூடிய நாடு
மாலைதீவு

13) ஒரு கருவில் பிறந்த இரண்டு ஜீவன் என அழைக்கப்படும் அமைப்புகள்

i. சர்வதேச புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான வங்கி (உலக வங்கி) IBRD

ii. சர்வதேச நாணய நிதி – IMF

- 1944ம் ஆண்டு பிரிட்டன்வூட்ஸ் ஒப்பந்தப்படி உருவாக்கப் பட்டது.

14) ஞாயிற்றுக்கிழமையை முதல்முறையாக விடுமுறை நாளாக அறிவித்த மன்னன்
உரோமானிய மன்னன் - கான்சன் ரைன்

15) கருணைக் கொலையை உலகில் முதலில் அங்கீகரித்த நாடு
நெதர்லாந்து

16) Microsoft க்கு முன் விற்பனையான மென்பொருள்
**Windows – 95**

17) மழைதரும் மேகம் - **Stratus clouds**

18) சார்க்க நாடுகளிடையே குடிசன அடர்த்தி கூடியது
பங்களாதேஷ்

19) உப்புக்கு வரியிட்ட முதல் நாடு – சீனா

20) முதல்முதல் அழகி போட்டி நடாத்திய நாடு – பெல்ஜியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) கெவியஸ் கோப்பர் என்பதன் கருத்து
**ஆட்கொணர்வு மனு அதாவது ஆயுதப்படைகளினால் தடுத்து வைக்கப்பட்டிருப்பவரை நீதிமன்றுக்கு முன்னால் கொண்டு வருவதற்காக செய்யப்படும் மனு.**

22) முக்கோண வடிவ வெள்ளி நாணயங்களை வெளியிட்ட இலங்கை அரசன் - **பராக்கிரமபாகு**

23) அமெரிக்க சுதந்திரப்போருக்கு தலைமை தாங்கியவர்
**ஜோர்ஜ் வோசிங்டன்**

i. சுதந்திரமடைந்த தினம் - **1776 July 04**

ii. சுதந்திர சிலையின் உயரம் - 162 அடி
பிரான்ஸ் நாடு நன்கொடையாக வழங்கியது.

24) உலகில் அதிக ஊழல்களை வெளிப்படுத்தும் பத்திரிகை
**வேஷிங்டன் போஸ்ற்**

25) விண்வெளி ஆய்வில் முக்கிய பங்காற்றிய இலங்கை விஞ்ஞானி
**சிறில் பொன்னம்பெரும**

26) மிகப்பழைய தானியம் - **குரக்கன்**

27) மனித உடலில் குருதி பாயாத பகுதி – **கண் கருவிழி**

28) மனித உடலில் வியர்க்காத பகுதி – **நாக்கு**

29) பூமியின் ஈர்ப்பு சக்தியில் இருந்து விடுபட்டு விண்வெளிக்குச் செல்ல ஒரு பொருளின் குறைந்த பட்ச வேகம்
ஒரு வினாடிக்கு **11km** வேகம்

30) உலகின் மிகநீளமான தேசியகீதத்தினைக் கொண்ட நாடு
கிரேக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**வைரவநாதன் (அமரர்) + விசாலாட்சி**

- அன்னராசா + ரத்தினேஸ்வரி
  - வேதிகா
  - டயனிக்கா
- குகராசா
- கிருஷ்ணவேணி + ஆசைப்பிள்ளை
  - துசிந்தன்

**மாசிலாமணி (அமரர்) + அன்னலட்சுமி (அமரர்)**

- தயாசலா
- ஜெயாசலா (சுவிஸ்) + சிவகுமார் (சுவிஸ்)
  - அனோஜா (சுவிஸ்)
- விஜிய நிர்மலா (சுவிஸ்) + சுரேஸ் (சுவிஸ்)
  - அபிஸ்
  - தனுஸ் (சுவிஸ்)
- ஜீவராணி (அமரர்)
- அசோக்குமார் (சுவிஸ்) + சிட்சபேஷினி (சுவிஸ்)
  - அயூரன் (சுவிஸ்)
- ராஜகுமாரி + கிருஸ்ணகுமார் (சுவிஸ்)
  - கபிஷன்
  - மேனுஷன்

**குகராசா + தயாசலா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



எங்கள் குடும்ப தெய்வம் இறையடி எய்திய போது எம்மைச் சூழ்ந்த பெருந்துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், மரணச் சடங்கு கிரியைகளில் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும், அந்தியேட்டிக் கிரியைகளை ஒட்டி நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், பதாதைகள் கட்டியவர்களுக்கும், மற்றும் இம்மலரை சிறப்புற வடிவமைத்து தந்த வானவில் பிறிண்டேர்ஸ், மாதகல் வீதி, பண்டத்தரிப்பு நிறுவனத்தார்க்கும் மற்றும் இன்றைய நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் மனம்மகிழ்ந்த நன்றிகளை நயமுடன் நவில்கின்றோம்.

**மாதகல் கிழக்கு,**
**மாதகல்.**

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.



"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.**

வானவில் பிறிண்டேர்ஸ்,
மாதகல் வீதி, பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org